# என் மகன்

1986 ல் சஷ்டி விரதம் இருந்து முருகன் அருளால் கிடைத்த வரம் தான் நிர்மல் குமார். இவன் எனக்கு அம்மா என்று அழைப்பதைக் கொடுத்த என் மகன் தான் நிர்மல் குமார். நிர்மலின் வளர்ச்சிப் படிகள் எல்லாமே தாமதமாகத் தான் இருந்தது. இதற்கிடையில் அடுத்த வருடமே (1987ல்) எனக்கு உஷா ரமணா மகளாகப் பிறந்தாள். இருவருமே அறுவை சிகிச்சை மூலமாகப் பிறந்தவர்கள். நிர்மல் மூன்று வயது வரை பேசவேயில்லை. ஆனால் வேண்டியதை சைகை மூலமாகவே அடைந்தான். என் மகளை சேர்ந்து வளரும் போது, பாப்பா பாரு பாப்பாவுக்கு கொடு என்று வளர்க்கும் போது, பாப்பா மழலை பேசும்போது பாப்பாதான் நிர்மலுக்கு ஆசிரியராக இருந்தாள். என் மகன் முதலில் பாப்பா என்றான் பிறகுதான் தாத்தா, அம்மம்மா, அத்தை, மாமா என்று மழலைப் பேசினான். என் மகளை இன்றும் நாங்கள் பாப்பா என்றுதான் அழைக்கிறோம். ஆனால் இன்றோ நிர்மல் பயமில்லாமல் பேசிக்கொண்டே இருக்கிறான்.

இனிதான் முக்கியமான விஷயத்தைக் கூற விரும்புகிறேன் என்னென்றால் அடுத்து படிப்பு. 6 மாதம் அருகில் உள்ள பள்ளியில் சேர்த்தேன். அவன் ஒரு நாளும் படிக்கவில்லை. அம்மம்மா எப்பொழுது வருவார்கள் என்று வாசலையே நோக்கியிருப்பான். பிறகு 1990ல் மகனையும், மகளையும் வேறு பள்ளியில் LKG சேர்த்தேன். அங்கும் அவன் படிக்கவில்லை. அதிகப்படியாக 'அ' என்ற எழுத்தை ஒரு பக்கம் முழுவதுமாக எழுதுவான். அடுத்த எழுத்தை இரண்டு பக்கங்களை புரட்டி விட்டு எழுதுவான். எப்பொழுதும் விளையாடிக்கொண்டேயிருப்பான். நானும் இரண்டு முறை LKG, மற்றும் UKG இரண்டு முறை படிக்க வைத்தேன் ஆனாலும் அவனால் சாதாரணப் பள்ளியில் படிக்க முடியவில்லை. பிறகு ~~மன~~ மனநல மருத்துவரை அணுகிய போது அவர்தான் இவனுக்கு கற்றல் குறைபாடு உள்ளது என்றும் இவர்களுக்கான சிறப்புப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்றும் அறிவித்தார்.

பிறகு எக்மோரில் உள்ள 'ஆஷ்ரயா' என்னும் சிறப்புப் பள்ளியில் 1995ல் சேர்த்தோம். அங்குதான் திரு. இராமலிங்கம் அவர்களை சந்தித்தோம். அவரே எங்கள் முதல் ஆசிரியர், இங்கு நிறங்கள், பொருத்துக போன்றவற்றைக் கற்றுக் கொண்டான்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சூழ்நிலைக் காரணமாக வேறு சாதாரணப் பள்ளியில் சேர்த்தோம். ஆனால் படிக்க முடியவில்லை. பிறகு சிறப்புப் பயிற்சியை தொடங்கி வைத்த திரு. இராமலிங்கம் அவர்களிடமே தொடர்ந்தோம். 2000 முதல் இன்று 2019 வரை நிர்மல் மாருதி சேவா சிறப்புப் பள்ளியில்தான் தொடர்கிறான். பயிற்சி பல பெற்று இன்று O.T. ஆசிரியருக்கு உதவியாளராக பணிபுரிந்து வருகிறான். எங்களுடைய 19 வருட வளர்ச்சியைக் கூற வேண்டுமானால் முதலில் திரு. இராமலிங்கம் ஐயா அவர்களுக்குத்தான் கூற வேண்டும். என் மகன் இன்று மனிதனாக உலா வருகிறான் என்றால் அதற்கு இப்பள்ளியின் பயிற்சிதான் முக்கிய காரணம்.

இப்பள்ளியில் படிப்போடு பல கலைகளையும் சொல்லித்தருகிறார்கள். தியானம், உடற்பயிற்சி (திருக்குறளைக் கூறிக்கொண்டு Brain jim, ஆடல், பாடல், விளையாட்டு, நாடகம் (ஆண்டு விழாவில்) போன்றவற்றைக் கற்றுத்தருகிறார்கள். மேற்கூறிய பயிற்சிகளால் குழந்தைகளின் மனம் ஒருநிலைப்பெற்று அமைதியைக் காக்கிறது. வெளி மாநிலங்களுக்கும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துக் கொள்வார்கள். என் மகனும் பல பரிசுகள் பெற்றிருக்கிறான். மேலும் என் மகனின் வளர்ச்சியைப் பற்றி கூற விரும்புகிறேன். முதலில் வீட்டிலிருந்து பள்ளிக்கு ஆட்டோவில்தான் சென்றுக் கொண்டிருந்தான். இடையில் ஆட்டோ சரியாக வராததால் என் மகள் கற்றுக்கொடுத்த சைக்கிள் பயிற்சியால் நேரிடையாக சைக்கிளிலேயே சென்று வந்தான். இப்பொழுது பெரம்பூரில் இருந்த இல்லத்தை பல்லாவரம் பம்மலில் மாற்றிக் குடியேறிவிட்டதால் (JAN 2018) இரண்டு தொடர்வண்டியில் (TRAIN) மாறி மாறி பயணம் செய்து பிறகு லோகோ ரயில் நிலையத்தில் இறங்கி சைக்கிள் நிலையத்தில் வைத்துள்ள சைக்கிளை எடுத்துக்கொண்டு பள்ளிக்குச் செல்கிறான். அவனுக்குள் தனித்தன்மையை வளர்த்துக் கொண்டுள்ளான். ரயில் பயணத்தையும் என் மகள்தான் பயிற்றுவித்தாள். முதல் இரண்டுநாள் அவள் அவனுடன் சென்றாள். ரயிலில் ஏறும்முன் L.works நிற்குமோ என்று கேட்டறிந்த பிறகே செல்வான். எட்டு வருடமாக கைப்பேசியை உபகரணமாகக் கொண்டு சென்று சேர்ந்ததும் கிளம்புவதும் தெரிவிப்பான். ஏதேனும் சந்தேகமிருந்தால் கைப்பேசி மூலமாகவே தீர்த்துக் கொள்வான். இவனின் நற்குணம் என்னவென்றால், தாய் தந்தை சொல்லைத் தட்டமாட்டான். எதைக் குறிப்பாகக் கேட்டோமோ அதைத்தான் செய்வான். கேட்டிருக்காமல் தண்டவாளத்தை தாண்டவே மாட்டான். (சைக்கிளில் செல்லும்போது)

மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட 5 பொருட்களை மனதில் நிறுத்தி கடைக்குச் சென்று பொருட்களை வாங்கி வருவான். கடைக்காரரிடம் கண்டிப்பாக ரசீது பெற்று மீதிசில்லறையை கொண்டு வந்து என்னை சரிபார்க்கச் சொல்வான். சில சமயம் ஏதுதிக் கொடுக்கும் பல பொருட்களையும் சிரத்தையோடு வாங்கி வருவான்.

வீட்டில் அவனுக்கென்று சில வேலைகளை குறிப்பிட்டுள்ளோம். அதை அவன் தவறாமல் செய்வான். அதாவது சனி ஞாயிறுகளில் ஒட்டடை அடிப்பது, வீட்டை துடைப்பது, மின் விசிறிகளை சுத்தப்படுத்துவது, அவனுடைய மிதிவண்டியை சுத்தப்படுத்துவது, தோட்டத்திற்கு எருபோடுவது, தினமும் செடிகளுக்கு நீர் பாய்ச்சுவது (ஊற்றுவது) குறிப்பாக தினமும் உறங்குவதற்கு முன் வீட்டின் முன் கதவு மற்றும் பின் கதவைப் பூட்டி சாவியை என்னிடம் தருவது என்று பொறுப்பாக செயல்படுவான்.

ஆக என் மகனின் வளர்ச்சிப் பாதையில் இப்பள்ளியின் பங்கு பெருமளவு அவனை உயர்த்தியுள்ளது. எங்கள் மனமும் நிறைவாக உள்ளது. இப்பள்ளி வாழ்க வளர்க.